CIVIL SERVICES (MAIN) EXAM-2022

CRNA-S-TML

தமிழ் / TAMIL

தாள் II / Paper II

(இலக்கியம்) / (LITERATURE)

கால அளவு : **மூன்று** மணி நேரம் *Time Allowed : **Three** Hours*	மொத்த மதிப்பெண்கள் : **250** *Maximum Marks : **250***

வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

வினாக்களுக்கு விடையெழுதும், முன்பாகப் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றையும் அருள்கூர்ந்து படிக்கவும் :

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கபட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

Please read each of the following instructions carefully before attempting questions :

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

The number of marks carried by a question/part is indicated against it.

*Answers must be written in **TAMIL**.*

Word limit in questions, wherever specified, should be adhered to.

Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

Optional Province · optionalprovince.com

SECTION A

Q1. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் "செல்வத்துப் பயனே ஈதல்" என்று எதனால் வலியுறுத்துகிறார். *10*

(b) அரசனுக்கு இருக்க வேண்டிய மாண்புகளைத் திருக்குறள்வழி விளக்குக. *10*

(c) இளங்கோவடிகள் வையையைத் தற்குறிப்பேற்றம் அமைய எங்ஙனம் காட்சிப்படுத்துகிறார். *10*

(d) இராவணன் பூதலம் என்னும் நங்கைதன்னையே நோக்கிப் புக்கதேன் ? விளக்குக. *10*

(e) மழையை ஆண்டாள் எவ்வாறு பாடுகிறார் ? *10*

Q2. (a) கும்பகருணனின் பண்புநலன்களைப் புலப்படுத்துக. *20*

(b) குறுந்தொகையில் இடம்பெறும் வரலாற்றுக் குறிப்புகளை விளக்குக. *15*

(c) இறைவனிடம் மாணிக்கவாசகர் வேண்டுவன யாவை ? விளக்குக. *15*

Q3. (a) காதலால் கடவுளை அடையலாம் என்று காட்டியவர் ஆண்டாள் என்னும் கருத்தினை ஆராய்க. *20*

(b) இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் மதுரை நகரின் அமைப்பு குறித்து எழுதுக. *15*

(c) சோழன் நல்லுருத்திரன் இயற்றிய புறநானூற்றுப் பாடலின் திணை, துறைகளை விளக்கி அப்பாடலின் சிறப்பை மதிப்பிடுக. *15*

Optional Province · optionalprovince.com

Q4. பின்வருவனவற்றிற்கு இடம், பொருள், நயம் முதலியவற்றை விளக்குக :

(a) அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பே துற்றதும் *20*

(b) யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே *15*

(c) பொறுப்பார் அன்றே பெரியோர் சிறுநாய்கள் தம்
பொய்யினையே *15*

Optional Province · optionalprovince.com

SECTION B

Q5. பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) கண்ணம்மாவைக் குழந்தையாகக் கண்டு பாரதியார் உரைப்பனவற்றை விளக்குக. *10*

(b) 'வாழ்வின் வீடு' எது என்று பாரதிதாசன்வழி நின்று விளக்குக. *10*

(c) அண்ணாமலையின் அப்பாவித்தனத்தை அகிலன் எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ? *10*

(d) மலையருவிவழி அறியலாகும் தாலாட்டுப் பாடலின் பொது இயல்புகளைப் புலப்படுத்துக. *10*

(e) நா. காமராசனின் கருப்பு மலர்கள் புதுக்கவிதையில் செய்த மாற்றங்களை எடுத்துரைக்க. *10*

Q6. (a) சி.என். அண்ணாதுரை தம் காலத் தமிழக நிலையாகச் சுட்டுவனவற்றை எழுதுக. *20*

(b) குரு - சீடன் உரையாடல்வழி ஜெயகாந்தன் உணர்த்துவன யாவை ? *15*

(c) மலையருவியில் தாது வருடப் பஞ்சம் எங்ஙனம் வெளிப்பட்டுள்ளது. *15*

Q7. (a) முத்துப்பட்டனின் ஆளுமைகளை மதிப்பிடுக. *20*

(b) ஜெயகாந்தன் சிறுகதைகளின் உவமைச் சிறப்பை விளக்குக. *15*

(c) புரட்சி மனப்பான்மையைத் தீய்த்தவை குறித்து அண்ணா கூறுவன யாவை ? *15*

Optional Province · optionalprovince.com

Q8. (a) யாருக்கும் வெட்கமில்லைவழி வெளிப்படும் எள்ளல் சுவையை விளக்குக. *20*

(b) உரிமைப் பஞ்சம் பற்றிய மு.வ.வின் பார்வையைப் புலப்படுத்துக. *15*

(c) நாட்டுப்புறப் பாடல்களில் பழமொழிகள் ஆளப்படும் பான்மையினை மலையருவிவழிநின்று விளக்குக. *15*

Optional Province · optionalprovince.com